1992 செப்டம்பர் 24]. [திரு. ம. சின்னசாமி]

(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 30-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய என்பத்திரெண்டாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் :

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஆறாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி(திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8 முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992–93—பொதுவிவாதம் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992–93 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம் தொடர்கிறது. நேற்றையதினம் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசமுடியாமல் போய்விட்டது. அவர்கள் அனைவரும் பேசவேண்டுமென்று என்னிடத்தில் கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, இப்போதிருந்து 12.45 வரையிலும் விவாதத்திற்கும், பதிலுரைக்கும் ஒதுக்கலாம் என்று கருதுகிறேன். அதற்குள் முடிக்கிற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாக தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும். திரு. ஆர். சிங்காரம்.

முற்பகல் 11–20

*திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா ஒரே நாடு, எத்துணை மொழி, எத்துணை இனம், எத்துணை குலம், எத்துணை மதம் இருந்தாலும், அவைகளின் முரண்பாடுகளை எல்லாம் கடந்து, நாம் இந்தியர், நமது நாடு இந்தியா என்றஉணர்வை ஊட்டி வளர்த்தது காங்கிரஸ் பேரியக்கம். குமரி முதல் இமயம் வரை உள்ள பிரதேசத்தை ஒரே தேசமாக கட்டிக் காத்தது காங்கிரஸ் பேரியக்கம். அன்று நாட்டுப் பிரிவினை பேசியவர்கள் எல்லாம், தங்கள் பகுதிகளிலே மட்டும் இருந்து கொண்டு பேசிவிட்டு, பின்னாலே நாடாளு மன்றம் சென்ற பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக நாட்டுப் பிரிவினை உணர்வுகளை மறந்தார்கள். தேச ஒற்றுமையில் அக்கறை செலுத்தினார்கள். சில தலைவர்கள் கூட தேச ஒற்று